செ.வெ.எண்.04 நாள்.03.04.2017.

திருநெல்வேலி மாவட்டம், சீவலப்பேரி சந்தை பகுதியில் 70 ஹெக்டேர் நிலப்பரப்பில் சீமை கருவேல மரங்களை வேருடன் அகற்றும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

———————

திருநெல்வேலி மாவட்டம், சீவலப்பேரி சந்தை பகுதியில் 70 ஹெக்டேர் நிலப்பரப்பளவில் சீமை கருவேல மரங்களை வேருடன் அகற்றும் பணிகள் துவக்க நிகழ்ச்சி இன்று (03.04.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் திரு.எச்.வசந்தகுமார் அவர்கள் முன்னிலையில் சீமை கருவேல மரங்கள் வேருடன் அகற்றும் பணிகளை தொடங்கி வைத்தார்கள்.

பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை நீதிமன்ற உத்தரவின்படி, சீமை கருவேல மரங்கள் வேருடன் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை அரசுக்கு சொந்தமான இடங்களில் 60 சதவித அளவிற்கு முற்றிலுமாக அகற்றப்பட்டுள்ளது. தனியார் நிலங்களில் சீமை கருவேல மரங்களை ஒழிக்கும் வகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், குடியிருப்போர் நலச்சங்கப் பிரதிநிதிகள், ரோட்டரி உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள், கல்லூரி, பள்ளி மாணவ, மாணவியர்கள் என பல்வேறு மட்டங்களில் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இன்று நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ரூ.29 இலட்சம் மதிப்பிலான JCB இயந்திரத்தை சொந்தமாக வாங்கி சீமை கருவேல மரங்களை வேருடன் அகற்றும் பணிகளுக்காக பயன்படுத்தியுள்ளார். இன்று, சீவலப்பேரி சந்தை பகுதியில் 70 ஹெக்டேர் நிலப்பரப்பில் சீமை கருவேல மரங்கள் அழிக்கும் பணிகள் துவக்கப்பட்டுள்ளது. சீமை கருவேல மரங்கள் அழிக்கும் பணிகள் முடிந்தவுடன் இப்பகுதியில் உள்ள குளங்கள் தூர்வாரும் பணிகளும் செய்யப்படவுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் கருவேல மரங்கள் அகற்றும் பணிகள் தொடர்ந்து நடைபெறும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், பாளையங்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.சண்முகத்தாய், திருமதி.ஆறுமுகக்கனி மற்றும் முக்கிய பிரமுகர்கள், அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.